Kalanjiyam International Journal of Tamil Studies

களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்வு இதழ்

https://ngmtamil.in/

Article Type: Original Research Article

Distinctions of Sense Organisms Referred to in Tolkappiyam's Genetics in Sangam Literature

Dr.K.Sankara Narayanan *

Assistant Professor& Head (i/c), Sangappalagai for Tamil Development, University of Madras, Chennai – 600 005.

* Correspondence: krksankaraatamil@gmail.com,

Received: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

Abstract:. Tolkāppiyam, regarded as the foundational text of the Tamil grammatical tradition, stands as a primary source that reflects the scientific, cultural, and philosophical thought of the Sangam-age Tamils. The Porulatikāram of the Tolkāppiyam offers a nuanced classification of living beings by focusing on their nature, functions, and levels of cognition. This study examines how the classifications of living beings identified by Tolkāppiyar are reflected in various forms within Sangam literature.

Tolkāppiyar classifies living beings according to levels of knowledge, ranging from one-sense to six-sense organisms. Plants, reptiles, birds, animals, and human beings are indicated as functioning in accordance with these cognitive levels. Such classifications of life are closely integrated with human life in Sangam literature through descriptions of nature, as well as in akam (interior) and puram (exterior) poems.

In Sangam works such as Akanāṉūṟu, Kuṟuntokai, and Puṟanāṉūṟu, the activities of living beings are often explained through comparisons with human emotions. This reveals that the classifications of living beings proposed by Tolkāppiyar are not merely grammatical constructs, but also form the foundation of the socio-cultural and philosophical thought of Sangam society.

This study explores how these classifications of living beings are represented in Sangam literature and how, through them, the Tamils' understanding of nature, biology, and philosophy evolved. Through this analysis, the significance of Tolkāppiyam's biological thought within the Sangam literary tradition is re-evaluated..

Keywords: Distinctions of sense organisms, Tholkappiyam, Sangam literature, grass, tree, snail, oyster, termite, ant, beetle, dragonfly, animal, bird, humans, One Sense organisms, One Sense organisms, Two Sense organisms, Three Sense organisms, Four Sense organisms, Five Sense organisms, Six Sense organisms,,

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

https://doi.org/10.63300/kijts04052026

சங்க இலக்கியங்களில் தொல்காப்பிய மரபியல் சுட்டும் உயிர்ப் பாகுபாட்டு உயிரினங்கள்

***முனைவர் கி.சங்கரநாராயணன்,** துறைத்தலைவர், தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை – 600005.

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கண மரபின் முதன்மை நூலாகக் கருதப்படும் தொல்காப்பியம் சங்ககாலத் தமிழர்களின் அறிவியல், பண்பாட்டு மற்றும் தத்துவச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரம் உயிர்களின் இயல்பு, செயல்பாடு மற்றும் அறிவுத் திறன் ஆகியவற்றை மையமாகக் கொண்டு உயிர்களை நுட்பமாகப் பாகுபடுத்துகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் உயிர்ப்பாகுபாடுகள் சங்க இலக்கியங்களில் பல்வேறு வடிவங்களில் பிரதிபலிப்பதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

தொல்காப்பியர் உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை அறிவு நிலைகளின் அடிப்படையில் வகைப்படுத்துகிறார். தாவரங்கள், ஊர்வன, பறவைகள், விலங்குகள், மனிதன் ஆகியோர் இவ்வறிவு நிலைகளுக்கேற்ப செயல்படுவதாகச் சுட்டப்படுகின்றனர். இத்தகைய உயிர்ப்பாகுபாடு சங்க இலக்கியங்களில் இயற்கை வருணனைகள், அகப் பாடல்கள் மற்றும் புறப் பாடல்கள் ஆகியவற்றில் மனித வாழ்க்கையுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது.

எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகிய சங்க நூல்களில், உயிர்களின் செயற்பாடுகள் மனித உணர்வுகளோடு ஒப்பிட்டு விளக்கப்படுகின்றன. இதன் மூலம், தொல்காப்பியர் குறிப்பிடும் உயிர்ப்பாகுபாடுகள் இலக்கண வரையறையாக மட்டுமன்றி, சங்ககாலச் சமூகத்தின் வாழ்வியல் சிந்தனைகளுக்கான அடித்தளமாக அமைந்துள்ளன என்பது வெளிப்படுகிறது.

இவ்வாய்வு, சங்க இலக்கியங்களில் உயிர்ப்பாகுபாடுகள் எவ்வாறு காட்சியளிக்கின்றன என்பதையும், அவற்றின் வழியாகத் தமிழர்களின் இயற்கை அறிவு, உயிரியல் புரிதல் மற்றும் தத்துவ நோக்கு எவ்வாறு வளர்ந்தன என்பதையும் ஆராய்கிறது. இதன் மூலம், தொல்காப்பியத்தின் உயிரியல் சிந்தனை சங்க இலக்கிய மரபில் பெற்றுள்ள முக்கியத்துவம் மீளாய்வு செய்யப்படுகிறது.

திறவுச்சொற்கள்

உயிர்ப்பாகுபாடு, தொல்காப்பியம், சங்க இலக்கியம், புல், மரம், நந்து, முரள், சிதல், எறும்பு, வண்டு, தும்பி, மா, புள், மக்கள், ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர்

முன்னுரை

தொல்காப்பியர் தமக்கு முன்னதாக, இவ்வுலக உயிரினங்களை மிக நேரிதாகத் தெளிவுற உணர்ந்த சான்றோர் ஆறுவகையாக வகைப்படுத்தியுள்ளனர் என்று மரபியலில் கூறுகிறார். ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் ஆகிய ஆறுவகையான உயிர்ப்பாகுபாட்டினைக் குறிப்பிடுகிறார். அவை பின்வருமாறு,

ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே

இரண்டு அறிவதுவே அதனொடு நாவே

மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே

நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே

ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே

ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே (தொல்.பொருள்.மரபு.1526)

தொட்டு அறியும் தன்மையுடைய உயிரிகளை ஓரறிவு உயிர்கள் என்கிறார். புல்லும் மரமும் இதற்குச் சான்றாகும்.

புல்லும் மரனும் ஓர் அறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (தொல்.பொருள்.மரபு.1527)

தொடு உணர்வு மற்றும் நாவினால் சுவைத்தறியும் உணர்வும் உடைய உயிரிகளை ஈரறிவு உயிர்கள் என்கிறார். நந்தும் முரளும் இதற்குச் சான்றாகும்.

நந்தும் முரளும் ஈர் அறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (தொல்.பொருள்.மரபு.1528)

தொடுதல், சுவையறிதலுடன் மூக்கால் முகர்தல் சுவையுடைய உயிரிகளை மூவறிவு உயிர்கள் என்கிறார். சிதலும் எறும்பும் இதற்குச் சான்றாகும்.

சிதலும் எறும்பும் மூவறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (தொல்.பொருள்.மரபு.1529)

தொடுஉணர்வு, சுவையுணர்வு, முக்கால் முகர்தலுடன் கண்ணாற் காண்டல் அறிவை உடைய உயிரினங்களை மூவறிவு உயிர்கள் என்பர். வண்டும் தும்பியும் இதற்குச் சான்றாகும்.

நண்டும் தும்பியும் நான்கு அறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (தொல்.பொருள்.மரபு.1530)

மேற்கண்ட நான்குடன் செவியால் கேட்டல் அறிவினை உடைய உயிரினங்களை ஐயறிவு உயிரினங்கள் என்பர். மாவும் புள்ளும் இதற்குச் சான்றாகும்.

மாவும் மாக்களும் ஐயறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (தொல்.பொருள்.மரபு.1531)

மேற்சொன்ன ஐந்து உணர்வுடன் ஆறாவதாகிய மனத்தால் அறியும் அறிவை உடைய மக்கள் இதற்குச் சான்றாவார்கள்.

மக்கள் தாமே ஆறு அறிவுயிரே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (தொல்.பொருள்.மரபு.1532)

சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள தொல்காப்பியர் சுட்டிய இந்த ஆறறிவு உயிர்களின் வருகை முறைகள் வருமாறு;

1. ஓரறிவுயிர்

செடிகொடிகள் முதலானவை புல்லும் மரமுமாகும். புல், மரம் என்பது தனிப்பட்ட ஒரு பெயரெல்ல. அது ஒரு பொதுப்பெயராகும். நற்றிணை(7), குறுந்தொகை(6), ஐங்குறுநூறு(3), பதிற்றுப்பத்து(7), கலித்தொகை(14), அகநானூறு(23), புறநானூறு(19), பெரும்பாணாற்றுப்படை(4), மலைபடுகடாம்(3), நெடுநல்வாடை(1), மதுரைக்காஞ்சி(2) ஆகிய சங்க இலக்கியங்களில் புல் என்ற சொற்களின் வருகை முறையினைக் காணமுடிகின்றது.

புல்

கொடிய புலி பதுங்கியிருக்கும் **புற்கள் நிறைந்த**, அச்சம் தரும் பயங்கரமான வழிப்பாதையில் தன்னுடைய கணவனுடன் சென்ற தலைவியின் துணிவு வியப்பிற்குரியது எனத் தோழி நற்றாயிடம் கூறும் நற்றிணைப் (29) பாடலில் புல் என்ற சொல் இடம்பெறுகிறது,

புலி பார்த்து உறையும் புல் அதர் சிறு நெறி (நற்றி.29:5)

புல் இதழ் கோங்கின் மெல் இதழ் குடை பூ (நற்றி.48:3)

பழைய மேட்டு நிலத்தில் தழைத்த, **முதிராத இளம் புல்லை**, முதிய பற்கள் இல்லாத முதிய பசு, நாவால் தடவி இன்புற்றாற் போல, நினைக்கும் காலத்து அக்காமம் புதிய இன்பத்தைத் தருவதாகும் எனக் குறுந்தொகை (204) குறிப்பிடுகிறது.

நல் உரை இகந்து புல் உரை தாஅய் (குறுந்.29:1)

புல் வீழ் இற்றி கல் இவர் வெள் வேர் (குறுந்.106:1)

முதை சுவல் கலித்த முற்றா இளம் புல்

மூதா தைவந்த ஆங்கு (குறுந்.204:3,4)

நல்லது, தீயது என்று வேறுபடுத்திப் பார்க்கப்படாமல், குவிந்த பூங்கொத்தினையும், **சிறிய இலையையுமுடைய** எருக்கம் பூவாயினும் அவற்றை அணிந்து கொள்வதால், இவை அற்பமானவை என்று கடவுள் தவிர்க்க மாட்டார் என்கிறது புறநானூறு(106).

வெள் வாய் கழுதை புல் இனம் பூட்டி (புறம்15:2)

திறம் புரி பசும் புல் பரப்பினர் கிடப்பி (புறம்93:8)

புல் இலை எருக்கம் ஆயினும் உடையவை (புறம்106:2)

ஆமா நெடு வரை நல் புல் ஆர (புறம்117:5)

மரம்

மரம் என்ற சொல்லானது நற்றிணை(10), குறுந்தொகை(8), ஐங்குறுநூறு(1), பதிற்றுப்பத்து(6), பரிபாடல்(4), கலித்தொகை(11), அகநானூறு(25), புறநானூறு(19), பெரும்பாணாற்றுப்படை(3),

பொருநராற்றுப்படை(2), மலைபடுகடாம்(4), குறிஞ்சிப்பாட்டு(2), மதுரைக்காஞ்சி(2) ஆகிய இடங்களில் காணமுடிகின்றது.

மண் அல்லது மரங்களில் உள்ள துளைகளில் பெருகி, காய்ந்து கருகிப்போன மரங்களைக் கொண்ட காடு என ஐங்குறுநூறு காட்சிப்படுத்துகிறது.

மண் புரை பெருகிய மரம் முளி கானம் (ஐங்கு.319:2)

மேகங்கள் தவழ்ந்து செல்லும் அளவுக்கு உயரமான மதிற்சுவர், அந்த மதில் மற்றும் அதன் அருகில் இருந்த காவல் மரங்களை அழித்தனர் என்கிறது பதிற்றுப்பத்து (15).

மழை தவழ்பு தலைஇய மதில் மரம் முருக்கி (பதிற்று.15:3)

மரம் கொல் மழ களிறு முழங்கும் பாசறை (பதிற்று.16:8)

பழுத்த மரத்தை நினைத்துச் செல்கின்ற பறவையைப் போல, புலவன் அல்லது பாணனாகிய நானும் அந்த வள்ளலை நாடிச் சென்றேன் என ஆற்றுப்படையின் இலக்கணத்தப் பகர்கின்றது பொருநராற்றுப்படை (64).

பழு மரம் உள்ளிய பறவையின் யானும் அவன் (பொருந.64)

நனை ஞாழலொடு மரம் குழீஇய (பொருந.197)

பழுத்த மரத்தை நாடி வரும் பறவைகளைப்போல, கொடை வள்ளல்களின் மலையக் காணவே பாணர்கள் வருவார்கள் எனப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

பழு மரம் தேரும் பறவை போல (பெரும்.20)

பல் மரம் நீள் இடை போகி நன் நகர் (பெரும்.368)

மஞ்ஞை ஆலும் மரம் பயில் இறும்பின் (பெரும்.495)

சரியான பருவம் இல்லாவிட்டாலும், நாவல் மரம் பழுத்துத் தன் பழங்களை உதிர்த்தது என மலைபடுகடாம் (134) சுட்டுகிறது.

காலம் அன்றியும் மரம் பயன் கொடுத்தலின் (மலை.134)

குறிக்கொண்டு மரம் கொட்டி நோக்கி (மலை.200)

2. ஈரறிவுயிர்

நந்தும் முரளும் ஈரறிவுயிராகும். சங்க இலக்கியங்களில் காணலாகும் நந்து தொடர்பான வருகை முறைகள் பின்வருமாறு,

நந்து

வயல்வெளியில் உள்ள ஆமையின் பசிய முதுகின் மீது அமர்ந்து கொண்டு, கழனிக் காவலர்கள் தாங்கள் பிடிக்கும் சுருண்ட சங்குகளை உடைத்து உண்பார்கள் என்கிறது நற்றிணை.

கழனி காவலர் சுரி நந்து உடைக்கும் (நற்றி.280:7)

சங்குகளும் நாரைகளும் செவ்விய வரிகளுடைய நாரையினிடத்துப் புள்ளினங்களும் உலவும் என்கிறது

பதிற்றுப்பத்து.

நந்து நாரையொடு செ வரிகளும் (பதிற்று.23:21)

சங்க இலக்கியங்களில் முரள் என்ற சொல்லின் வருகை முறையினைக் காண இயலவில்லை.

3. மூவறிவுயிர்

சிதலும் எறும்பும் மூவறிவுயிராகும். சிறுபாணாற்றுப்படை(1), பதிற்றுப்பத்து(1) ஆகிய இடங்களில் சிதல் என்ற சொல்லினைக் காணமுடிகின்றது.

சிதல்

வைரம் பாய்ந்த பழைய சுவரின் பலகைகளை, கூட்டமாக வந்த கறையான்கள் அரித்துத் தின்றன என்று சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

காழ் சோர் முது சுவர் கண சிதல் அரித்த (சிறுபாண்.133)

எறும்பு

போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு பேய்மகள் பலி இடும் காட்சியை விவரிக்கும்போது, அந்த உணவில் சிறு எறும்புகள் கூட அதை அண்டாத அளவுக்கு மிக உயர்ந்த நிலையில் இருந்தது என்பதைப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது.

எறும்பும் மூசா இறும்பூது மரபின் (பதிற்று.30:38)

4. நான்கறிவுயிர்

வண்டும் தும்பியும் மூவறிவுயிராகும். நற்றிணை(25), குறுந்தொகை(9), ஐங்குறுநூறு(12), பதிற்றுப்பத்து(10), பரிபாடல்(17), கலித்தொகை(21), அகநானூறு(46), புறநானூறு(8), பொருநராற்றுப்படை(3), முல்லைப்பாட்டு(1), நெடுநல்வாடை(1), மலைபடுகடாம்(4), மதுரைக்காஞ்சி(3) ஆகிய இலக்கியங்களில் வண்டு என்ற சொல்லின் வருகையினைக் காணமுடிகின்றது.

வண்டு

தேனையுண்ணுகின்ற வேட்கையினாலே மலரது செவ்வியைத் தெரிந்து சென்று ஊதாமல், எவ்விடத்தும் சென்று விழுகின்ற வண்டினைப் போன்றவன் அவன். அவனது கெடாத அந்தக் காட்சியைக்கண்டும், என் தொடிகள் தாமே கழன்றன. கழன்ற அத்தொடிகளை மீளவும் செறித்துக் கொண்ட எனது பண்பற்ற செய்தியானது, என்னை அகலாத ஒரு நினைப்பாகவே இருக்கின்றது எனக் கூறும் நற்றிணைப் (25) பாடலிலும் காணமுடிகின்றது.

வண்டு ஓர் அன்ன அவன் தந்த காட்சி (நற்றி.25:10)

நுண் தாது உறைக்கும் வண்டு இனம் ஒப்பி (நற்றி.27:2)

வண்டு தரு நாற்றம் வளி கலந்து ஈய (நற்றி.56:2)

திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமான் வள்ளியுடன் விளையாடும்போது, தேவசேனையின் நெருக்கமான மலர்க்கொண்டை மீது வண்டு பாய்ந்தது என்பதைப் பரிபாடல் குறிப்பிடுகின்றது.

செறி கொண்டை மேல் வண்டு சென்று பாய்ந்தன்றே (பரிபாட.9:43)

வெறி கொண்டான் குன்றத்து வண்டு

தார் தார் பிணக்குவார் கண்ணி ஓச்சி தடுமாறுவார் (பரிபாட.9:44,45)

திருமுருகாற்றுப்படையில் மலைவாழ் மக்கள் எனப்படும் கானவர் தழூஉ ஆட்டம் ஆடும்போது, மலையின் ஆழமான நீர்நிலைகளில் பூத்த நறுமணமிக்க பூக்களைப் பறித்து, அதை மாலையாகத் தொடுத்துத் தலைமுடியில் சூடிக்கொள்வதை காணமுடிகின்றது.

குண்டு சுனை பூத்த வண்டு படு கண்ணி (திருமுரு. 199)

மதுரைக்காஞ்சியில் வண்டுகள் தேன் உட்கொண்டு மகிழும், மணம் வீசும் அழகான மலர்கள் நிறைந்த குளத்தினைக் காணமுடிகின்றது.

வண்டு இறைகொண்ட கமழ் பூம் பொய்கை (மதுரை.253)

வண்டு பட பழுநிய தேன் ஆர் தோற்றத்து (மதுரை.475)

மென் சிறை வண்டு இனம் மான புணர்ந்தோர் (மதுரை.574)

<u>**தும்பி**</u>

நற்றிணை(5), குறுந்தொகை(4), ஐங்குறுநூறு(2), பதிற்றுப்பத்து(1), பரிபாடல்(10), கலித்தொகை(11), அகநானூறு(8), புறநானூறு(1), சிறுபாணாற்றுப்படை(1), மதுரைக்காஞ்சி (1) ஆகிய இலக்கியங்களில் தும்பி என்ற சொல்லினைக் காணமுடிகின்றது.

நற்றிணைப் பாடலில், மலைச் சரிவில் உள்ள காந்தள் பூவில் உள்ள தேனை உண்ணும் நீல மணி போன்ற நிறமுடைய வண்டை, யாழ் நரம்பின் இசையைப் போலப் பாடுவதையும் (17) காணமுடிகின்றது.

காந்தள் ஊதிய மணி நிற தும்பி

தீம் தொடை நரம்பின் இமிரும் (நற்றி.17:10,11)

நறும் தாது ஆடிய தும்பி பசும் கேழ் (நற்றி.25:3)

கிளை செத்து மொய்த்த தும்பி பழம் செத்து (நற்றி.35:3

கொடியை வாழி தும்பி இ நோய் (நற்றி.277:1)

பரிபாடலில் தும்பி, வண்டு, வண்டின் ஒருவகையான மிஞிறு ஆகியன மலர்ச் சுனைகளில் தேனுண்டு ஒலியெழுப்ப, மலர்கள் மலர்ந்து மணக்கும் காட்சியைக் காணலாம்.

வீழ் தும்பி வண்டொடு மிஞிறு ஆர்ப்ப சுனை மலர (பரிபாட.8:23)

வண்டொடு தும்பியும் வண் தொடை யாழ் ஆர்ப்ப (பரிபாட.23:50)

கணவனை இழந்த தலைவி ஒருத்தி, நள்ளிரவில் தன் கணவனின் மார்பில் உள்ள புண்களைப் பாசான தும்பிகள் மொய்த்துத் துளைப்பதை எண்ணி, அந்தத் துன்பம் பொறாமல் வருந்துவதை புறநானூற்றுப்பாடல் வழியாக அறியமுடிகின்றது.

நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும் (புறம்280:2)

5. ஐந்தறிவுயிர்

மாவும் புள்ளும் மூவறிவுயிராகும். சங்க இலக்கியங்களில் காணலாகும் மாவும் புள்ளும் தொடர்பான வருகை முறைகள் பின்வருமாறு,

மா

நற்றிணை(5), பதிற்றுப்பத்து(2), பரிபாடல்(2), கலித்தொகை(5), அகநானூறு(9), புறநானூறு(1), பெரும்பாணாற்றுப்படை(1), மதுரைக்காஞ்சி(2), குறிஞ்சிப்பாட்டு(2), பட்டினப்பாலை(1) ஆகிய சங்கக்கவிகளில் மா என்ற சொல் வருகை தருகின்றது.

அழகிய மயில் போன்ற பெண்களையும், இயற்கைப் புணர்ச்சியில் அவர்களோடு மறைவாகக் கூடும் காதலர்களைப் பற்றிய பரிபாடல் பாடலில் மா என்ற சொல்லைக் காணமுடிகின்றது.

மா மயில் அன்னார் மறையில் புணர் மைந்தர் (பரிபாட.11:41)

கடு மா களிறு அணைத்து கைவிடு நீர் போலும் (பரிபாட.20:105)

மதுரைக்காஞ்சியில், நல்ல அழகிய மயில் மெதுவாக நடந்து செல்வதைப் போல, கருவுற்ற மகளிர் மெதுவாக நடந்து சென்று முருகனை வழிபட்டனர் செய்தியைக் காணலாம்.

நன் மா மயிலின் மென்மெல இயலி (மதுரை.608)

கூட்டு உறை வய_மா புலியொடு குழும (மதுரை.677)

குறிஞ்சிப்பாட்டில், பெரிய குருந்த மரங்கள், வேங்கை மரங்கள் மற்றும் பலவகையான செடிகள் இருந்ததைப் பின்வரும் பாடல் வரி எண் 95 விளக்குகிறது.

மா இரும் குருந்தும் வேங்கையும் பிறவும் (குறி 95)

மணி நிறம் கொண்ட மா இரும் குஞ்சியின் (குறி 112)

மா இரும் பெடையோடு இரியல்போகி (பட் 56)

புள்

புள் என்ற சொல்லின் வருகையினை நற்றிணை(2), குறுந்தொகை(2), ஐங்குறுநூறு(1), பரிபாடல்(2), கலித்தொகை(4), அகநானூறு(1), புறநானூறு(4), மலைபடுகடாம் ஆகிய இலக்கியங்களில் காணமுடிகின்றது.

நெய்தல் மலர்கள் கூம்ப, பறவைகள்தங்கும் இடத்திற்குச் செல்ல, மாலையில் கடலோரத் தலைவிக்கு ஏற்படும் தனிமையையும், தலைவனின் பிரிவால் அவளது துன்பத்தையும் நற்றிணைப் பாடல் விவரிக்கிறது

பெருங் கடல் முழங்க கானல் மலர
இருங் கழி ஓதம் இல் இறந்து மலிர
வள் இதழ் நெய்தல் கூம்ப புள் உடன்
கமழ் பூம் பொதும்பர்க் கட்சி சேர

செல் சுடர் மழுங்கச் சிவந்து வாங்கு மண்டிலம்

கல் சேர்பு நண்ணிப் படர் அடைபு நடுங்க

புலம்பொடு வந்த புன்கண் மாலை

அன்னர் உன்னார் கழியின் பல் நாள்

வாழலென் வாழி தோழி என்கண்

பிணி பிறிதாகக் கூறுவர்

பழி பிறிதாகல் பண்புமார் அன்றே (நற்றி.117)

புள் இனம் குடம்பை உடன் சேர்பு உள்ளார் (நற்றி.382:4)

ஆகாயத்தில் உயர்ந்து பறக்கும் கருடக் கொடியை உடையவன் மற்றும் வெற்றியை விரும்பும் திருமால் என்கிறது புறநானூறு (15).

புள் இனம் இமிழும் புகழ் சால் விளை வயல் (புறம்15:4)

விண் உயர் புள் கொடி விறல் வெய்யோனும் (புறம்56:6)

செலவு ஆனாவே கலி கொள் புள் இனம் (புறம்199:3)

பெறாது பெயரும் புள் இனம் போல நின் (புறம்209:10)

6. <u>ஆறறிவுயிர்</u>

மனதால் பகுத்தறியும் திறன் கொண்ட மனிதர்கள எல்லாம் ஆறறிவினர் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். மக்கள் என்ற சொல் குறுந்தொகை(1), பரிபாடல்(2), கலித்தொகை(3), புறநானூறு(3) ஆகிய இலக்கியங்களில் வருகை தருகின்றது.

தொல்காப்பியத்தில் மக்கள் என்ற சொல்லைக் காணமுடிகின்றது.

மக்கள் நுதலிய அகனைந் திணையும்

சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர் (தொல்.அகம்.54)

<u>மக்கள்</u>

ஒரு காலத்தில் திருவிழா, கூத்து என மக்கள் கூட்டமாகஇருந்த ஊர், இப்போது வறட்சியாலோ அல்லது மற்றபிற காரணங்களாலோ மக்கள் ஊரைக் காலி செய்துவிட்டு வெறிச்சோடிப் போய்விட்டதுஎன்கிறது குறுந்தொகைப் பாடல்.

மக்கள் போகிய அணியில் ஆடு முன்றில் (குறுந்.41:4)

திதியின் சிறாரும் விதியின் மக்களும்

மாசு இல் எண்மரும் பதினொரு கபிலரும் (பரிபாட.3:6,7)

வென்றியின் மக்களுள் ஒருமையொடு பெயரிய (பரிபாட.5:5)

கீழ்வரும் கலித்தொகை வரியானது, திருதராஷ்டிரனின் மூத்த மகனான துரியோதனன், பாண்டவர்களைக் கபடத்தனமாக அரக்கு மாளிகையில் தீயிட்டு அழிக்க முற்பட்ட காட்சியை விளக்குகிறது.

முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால் (கலித்.25:2)

போ சீத்தை மக்கள் முறியே நீ மாறு இனி தொக்க (கலித்.94:22)

மடவரே நல் ஐயர் மக்கள் நெருனை (கலித்.102:30)

புறநானூறு, உலகத்தில் பரந்துகிடக்கும் மக்களுக்கெல்லாம் அறிவில் மாசற்ற அந்தணனாகிய கபிலன் உன்னிடம் பொருள்வேண்டி வருகின்ற புலவர்க்கு இனி இடமில்லாமல் உன்னுடைய புகழ் பரந்து நிற்கப் பாடிவிட்டான் எனக் குறிப்பிடுகிறது.

நில மிசை பரந்த மக்கட்கு எல்லாம் (புறம்.126:10)

மயக்குறு மக்களை இல்லோர்க்கு (புறம்.188**:6)**

மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர் (புறம்.191:3)

தொகுப்புரை

ஆய்வின் பக்க எல்லைகருதி, சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள சிற்சில பாடல்களை மட்டுமே இங்கு பதிவு செய்யப்படுகிறது. ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினங்களின் வருகையினை ஒட்டுமொத்த இலக்கியங்களில் பதிவாகியுள்ளவற்றை, அந்தந்த இலக்கியத்தின் பெயர்களுடன் அடைப்புக் குறிக்குள் வருகை முறைகளின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்களில் தொல்காப்பியர் குறிப்பிடும் ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிரினங்களின் வருகை முறைகளை மேற்கண்ட தரவுகளின் வழியாகத் தெளிவாகக் காணப்படுகின்றன. மூன்று அறிவு உயிரான முரளின் வருகைமுறையினை மட்டும் சங்க இலக்கியங்களில் காணஇயலவில்லை. தாவரங்கள், ஊர்வன, பறவைகள், விலங்குகள் மற்றும் மனிதன் ஆகிய உயிரினங்கள் அவரவர் அறிவு நிலைகளுக்கேற்ப இயற்கையுடனும் மனித வாழ்க்கையுடனும் இணைந்த வகையில் சங்கப் பாடல்களில் சித்தரிக்கப்படுகின்றன. இது தொல்காப்பியர் வகுத்த உயிர்ப்பாகுபாடுகள் சங்ககாலத்தில் வெறும் கோட்பாடாக அல்லாமல், வாழ்வியலோடு இயைந்த நடைமுறைச் சிந்தனையாக இருந்தன என்பதை உறுதிப்படுத்துகிறது.

இவ்வாறு உயிரினங்களின் வருகை முறைகள் இயற்கை வருணனைகள், அக மற்றும் புறப் பாடல்களில் முறையாக இடம் பெறுவதன் மூலம், சங்ககாலத் தமிழர்கள் உயிர்களைப் படிநிலை அடிப்படையில் புரிந்துகொண்ட அறிவியல் பார்வையையும், மனிதனை இயற்கையின் ஒரு அங்கமாகக் கருதும் தத்துவ நோக்கையும் வெளிப்படுத்துகின்றன. ஆகவே, தொல்காப்பியர் குறிப்பிடும் ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிரினப் பாகுபாடுகள் சங்க இலக்கியத்தின் கருத்துலகத்தை ஆழப்படுத்திய முக்கியச் சிந்தனையாக விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை.

துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர்உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் மூலமும் உரையும், 2010, சென்னை, சாரதா பதிப்பகம்

2. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தகநிலையம்
3. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தகநிலையம்
4. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 3, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தகநிலையம்
5. சங்கஇலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி – 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தகநிலையம்
6. சங்கஇலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி – 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தகநிலையம்
7. சுப்ரமணியம்.ச.வே.சு., சங்க இலக்கியம் முழுவதும், 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
8. தமிழண்ணல், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், தொகுதி – 1, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
9. தமிழண்ணல், தொல்காப்பியம் சொல்லதிகாரம், தொகுதி – 2, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
10. தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி – 3, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
11. பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், 2017, சென்னை, அமராவதி பதிப்பகம்

References

1. Elampooranar Urai. 2010,Tholkappiya Porulathikaaram MoolamumUraium, Chennai, Saratha Publication
2. Sangam Literature, Ettuthogai (Vol I, 2014, Chennai New Century Book House
3. Sangam Literature, Ettuthogai (Vol II, 2014, Chennai New Century Book House
4. Sangam Literature, Ettuthogai (Vol III, 2014, Chennai New Century Book House
5. Sangam Literature Patthupattu (Vol I, 2014, Chennai New Century Book House
6. Sangam Literature Patthupattu (Vol II, 2014, Chennai New Century Book House
7. Subramaniam.Sa.Ve.Su., Sangam Literature, 2006, Chennai, Manivaasagar Publication
8. Tamillannal, TholkappiyamEzhuthathikaaram, Vol – I, 2006, Chennai, Manivasagar Publications
9. Tamillannal, TholkappiyamCholathikaaram, Vol – II, 2006, Chennai, Manivasagar Publications
10. Tamillannal, Tholkappiyam Porullathikaaram, Vol – III, 2006, Chennai, Manivasagar Publications
11. Perachiriyarin Urai, Tholkappiyam Porullathikaaram, 2017, Chennai, Amaravathi Publication